உ

கடவுள் துணை.

மூடமதி திரவுகோல்.

இவை-செஞ்சி

ஏகாம்பரமுதலியாரால்

இயற்றப்பட்டு.

ஆ - இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1906.

சென்னை-நாராயணமுதலி வீதி 52-வது நெ-வீடு.



உ

கடவுள் துணை,

மூடமதி திரவுகோல்.

———:*:———

வெண்பா,

எத்தொழிலைச்செய்தாலும் யேதவத்தைப்பட்டாலும்
முத்தர்மனமிருக்கு மோனத்தே-வித்தகமாய்
காதிவினையாடியிரு கைவீசிவந்தாலும்
தாதியனம் நீர்க்குடத்தேதான்,

விருததம்.

ஏதப்பா பெண்டீரா லாவதென்ன
ஈன்றெடுத்த பிள்ளைகளா லாவதென்ன
கோதப்பா விந்துவினா லாவதென்ன
கொண்டதினால் கொடுப்பதினா லாவதென்ன
வாதப்பா சொல்லிநித்தம் அலைந்தேதேடும்
மகத்தான திரவியத்தா லாவதென்ன
போதப்பா போதமென்ற போதம்பார்த்தால்
பொருளுனக்கு லாபமுண்டு புகழ்ந்துகொள்ளே,

பல்லவி,

கருமம்விடாது பூர்வஜென்மத்தில்நீசெய்த
பாவம்விடாது ஒருவருக்குநீசெயத
தோஷம்விடாது,

அநுபல்லவி,

சிரசைமழுங்கடித்து ஸ்தலமெல்லாந்திரிந்தாலும்
சாடிசடைவளர்த்து குருவென்று அலைந்தாலும்
இரவும்பகலுமஜெப மாலையையிழுத்தாலும்
ஈசனுந்தலையிலே யெழுதினபடியல்லால் கரு

சரணங்கள்,

காலைமாலைமூன்று வேளையுங்குளித்தாலும்
கடடாகவிபூதி பட்டையாயடித்தாலும்
தாளைத்திறக்காமல் மந்திரம்படித்தாலும்
தலையிலேநான்முகன் யெழுதினபடியல்லால் கரு

காவடிதூக்கிநீ காசிக்குப்போனாலும்
கண்மூடிவாய்மூடி மௌனமாயிருந்தாலும்
தேவாலயங்கட்டி திருவிழாசெய்தாலும்
தீக்கோட்டைநடுவிலே யாகமவளர்த்தாலும் கரு

தீர்த்தமுழுதுங்கண்டு ஸ்தானங்கள்செய்தாலும்
தெரியாமல்குகைக்குள்ளே திருடன்போலிருந்தாலும்
பார்த்தவர்பிரமமிக்க வேடங்கள்பூண்டாலும்
பகலும்இரவும்தினம் விரதங்களிருந்தாலும் கரு

கஞ்சாவபினிதின்று காஷர்யம்பூண்டாலும்
காடேகித்தியமென்று மரவுரிதரித்தாலும்
தஞ்சமாய்குருவடி பணிவிடைசெய்தாலும்
தன்னையறியவென்று மலையேரிப்போனாலும் கரு

ஊசினுட்டிக்காலே ஊன்றிக்கொண்டிருந்தாலும்
யோகத்தடியின்மீது சலம்போலேகிடந்தநலும்
பேசாமல்மலையேறி பெருந்தவம்செய்தாலும்
பெண்டுபிளளைகளென்ற சந்தையைமறந்தாலும் கரு

திருப்பதிமலையேறி தலைமொட்டையடித்தாலும்
ஶ்ரீரங்கமதனிற்சென்று தெருவெல்லாம்புரண்டாலு
விரிதலைகொண்டாலும் வேதத்தைபடித்தாலும்
விடடோடும்ஆவியை தாவிப்பிடித்தாலும் கரு

அக்கினிபந்துபண்ணி அனலுக்குள்ளிருந்தாலும்
அலலாமல்ஜெலத்திலே தெப்பம்பேர்லிருந்தாலு

திக்கெட்டுதிசைகட்ட   சித்துகள் ஆனாலும்
  தின்டிகளெ ருளெல்லாம் பொன்னாகச்செய்தாலு கரு

காளிகூளிகளெல்லாம்   வசியமாய்ப்போனாலும்
  காட்டேரிகாத்தானை   யேவலாய்க்கொண்டாலும்
யாளிபோல்ஆகாசக்   குளிகையேகற்றாலும்
  யாருக்கும்தெரியாமல்   உருமாரித்திரிந்தாலும கரு

துளசிமணியைக்கோர்த்து   தாவடம்பூண்டாலும்
  தூங்காமலசிலகாலைக   கருசண்டம்பூண்டாலும்
அளவற்றமந்திரம்   ஆத்தோரஞ்செபித்தாலும்
  அன்னமுஞ்சொர்ணமும்   அள்ளியிரைத்தாலும் கரு

யில்லல்லரென்றுநீ   யெழுகடலலைந்தாலும்
  யில்லாமல்ராசிமானை   மரவாமல்தொழுதாலும்
வல்லவன்யேதென்று   வாய்கொண்டழுதாலும்
  வரட்டுத்தவனைபோலே   பையிலைபடித்தாலும் கரு

தன்னையறிந்தாப்போல்   சன்யாசம்பூண்டாலும
  தானேசகலமென்று   வாயாடித்திரிந்தாலும
பொன்வெள்ளிசெய்தாலும்   புசியாமலிருந்தாலும்
  போதிக்குங்குருவென்று   மடத்துக்குள்ளிருந்தா கரு

உலகத்தில்வெகுகோடி   மூடமதிகளுக்கும்
  உண்மையொன்றில்லாத பொய்யாக்குமபேயர்க்கும்
சகலர்க்குந்தெளிவாக   சிறுமணவூர்முனிசாமி
  சாற்றியதிரவுகோல்   யாராதபெரியோர்க்கும் கரு

உ

கடவுள்துணை.

சிவவாக்கியம்.

—o:—

காணவேணுமென்றுநீர் கடல்மலைகளேறுவீர்
ஆணவதல்லவோ அறிவில்லாமூடரோ
வேணுமென்றயீசர்பாதம் மெய்யுளேவிளங்கினால்
காணலாகும்நாதனைக் கடந்துநின்றசோதியை க

ஓடி யோடி யோடி யோடி உட்கலந்தசோதியை
நாடி நாடி நாடி நாடி நாள்களும்கழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோனமானிடர்
கோடி கோடி கோடி கோடி யெண்ணிறந்தகோடியே, உ

தூர தூர தூர மென்று சொல்லியோடும்வீணரே
பாரும்விண்ணும்யெங்குமாம் பரந்துமெய்ப்பராபரம்
ஊருநாடுகாடுபேயுழன்று தேடவேணுமோ
நேரதாகஉம்முளே நினைத்தறிந்துகொள்ளுமே, ௩

நட்டுவைத்ததேவரும் நடாமல்வைத்ததேவரும்
சுட்டுவைத்ததேவரும் சுடாமல்வைத்ததேவரும்
கட்டிவைத்தபுத்தகக் கதைகளின்புரட்டெலாம
பெட்டதாய்முடிந்ததே பிரானையானறிந்தபின், ௪

நட்டகல்லைதெய்வமென்று நாலுபக்கம்சாற்றுநீர்
சுற்றிவந்துமொணமொணன்று சொல்லுமந்ரமேதடா
நட்டகல்லும்பேசுமோ நாதனுள்ளிருக்கையிலே
சுட்டசட்டிசட்டுவம் கறிச்சுவையறியுமே, ௫

ஓசைபெற்றகல்லைநீர் உடைத்துருக்கள்செய்குறீர்
வாசலில்பதித்தகல் மழுங்கவும்மிதிக்கிறீர்
பூசைபெற்றகல்லிலே பூவும்நீரும்சாற்றுநீர்
யீசனுக்குகந்தகல் லிரண்டுகல்லுமல்லவே, ௬

பண்டுநான்பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலேஜெபித்துவிட்ட மந்திரங்களெத்தனை
மிண்டநாய்திரிந்தபோ திறைத்தநீர்களெத்தனை
மீளவும்சிவாலயங்கள் சுத்திவந்ததெத்தனை
அண்டர்கோனிருப்பிடம் அறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோவில்தெய்வமென்று அறிந்துணர்ந்தஞானிகள்
கண்டகோவில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே, ௭

விருத்தம்,

எத்தனைதான் கல்லுகளைப்பூசித்தாலும்
ஈனர்களேஉங்களுக்கு மோட்சமுண்டோ
சுத்தமுடன்தலைமுழுகித் தவஞ்செய்தாலும்
சொல்லரியபேரின்பந் தோன்றுமோதான்
பித்தர்களேகல்லுகளை விலைக்குவாங்கி
பிறனென்றசிலையிலே முடிந்துகொண்டு
செத்தபின்புகயிலாயம் சேர்வோமென்றால்
சேர்வதில்லைஅருணரகம் சேர்வீர்தானே, ௧

சற்குருவைஅறியாம லுலகிலேதான்
சண்டாளர்கல்லுகளைத் தெய்வமென்று
பொய்க்குருக்கள் சொன்னபுத்திதன்னைக்கேட்டுப்
பூசைசெய்துகல்லுகளைப் போற்றிசெய்வார்;
சொற்குருக்கள்தங்களுடைய செய்திகேட்டால்
சொர்க்கமுண்டோ நரகமெல்லாம்சொல்லும்போது
சற்குருவைஅறிந்தவருக் குடனேமோட்ச
சார்வதென்றே முன்னோர்கள்சாற்றினரோ, ௨

கருப்பேய்கள்காப்பேய்கள் காமப்பேய்கள்
கனதனத்துப் பொருட்பேய்கள் வசனப்பேய்கள்

மருட்பேய்கள் மனப்பேய்கள் வனசப்பேய்கள்
வண்மையில்லாக் குலப்பேய்கள் வாதுகூறும்
இருட்பேய்கள் சமயமத மேற்றும்பேய்கள்
இயவாதமந்திரங்க ளோதும்பேய்கள்
குருப்பேய்கள் தங்களுட பெருமைதன்னை
குவலயத்தில்கூறுவது குற்றந்தானே ௩

தன்னைத்தானறியாத மூடரெல்லாம்
தர்னுலகில்குருக்களென்று பெயரும்சொல்வார்
பின்னைத்தான்பிறவாத னெறியுங்காணார்
பேசாதமந்திரத்தின் பெருமைகாணார்
முன்னைப்பெரியோர்கள் சொன்னநூலில்
முறைமைதனை யறியாகள் மூடரெல்லாம்
என்னத்தான்சீஷருக்கு முத்திகட்டி
ஈடேரக்கொடுப்பதுவுமியல்வில்லாரே, ௪

அடியற்றமரம்போலே தெண்டனேது
ஆசாரவென்றமொழிக் கர்த்தமேது
பிடிபட்டகள்ளனைப்போல் கும்பிடேது
பேசாமல்பற்பலவாய் பினத்தலேது
கொடியிட்டமரத்துக்கு சுத்தங்களேது
கும்பிட்டகோயிலுக்கு குரியங்களேது
வடிவற்றசிருவருளை மனதில்வைத்தால்
வண்மையுடன் பரமபதம்வாழலாமே, ௫

ஸ்முடுகு ஆனந்தக்களிப்பு,

மனைவியே உனைக்கொல்லும் யெமனடா
அவள் எமனடா ணமனடா
பேயடா பூதண்டா — மனைவி

கையிக்கி வளையிலென்று மாட்டுவாள்
அவள் கலையென்பாள் பணியென்பாள்
தலைக்கெண்ணை தாவென்பாள் — மனைவி

உண்டிக்கேதினம் வாட்டுவாள்
நல்லஉடையென்பாள் படையென்பாள்
நடையென்பாள் யிடமென்பாள் — மனைவி

பிள்ளையே உன்காலில் விலங்கடா
அதுவிலங்கடா கயிட
வலையடா உலையடா — மனைவி

உரவேஉனையாட்டும் புலியடா
அதுபுலியடா கிலியடா
சுனையடா மலையடா — மனைவி

பணமேஉனைவெட்டும் கத்தியடா
அதுகத்தியடா கத்தியடா
உளியடா வாளடா — மனைவி

மூடமதிதிரவுகோல்

முற்றிற்று,

2
7.08.56.